Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 4-6-1985 செவ்வாய்க்கிழமை (வைகாசி 22 றம்ழான் 14) முழக்கம் 119

## திருமலையிலிருந்து புறப்பட்ட பருத்தித்துறை பஸ் வந்து சேரவில்லை!

(திருமலை)

பருத்திச்துறையிலிருந்து நேற்று முன்தினம் திருமலை சென்ற பருத்தித்துறை டிப்போ பஸ், நேற்றுக் காலை ஏழு மணியளவில் திருமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாயினும், இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வந்து சேரவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது பரவலாக அடிபட்ட பல வதந்திகளால் பஸ் டிப்போவுக்குப் படையெடுத்த பல பிரயாணிகளின் உறவினர்கள் அங்கு பதற்றத்துடன் நிற்கக் காணப்பட்டனர். இந்த பஸ்ஸில் சுமார் நாற்பது பிரயாணிகள் புறப்பட்டதாக திருமலை டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பல பெண்களும் பஸ்ஸில் பயணம் செய்தனர்.

★ டில்லி விமான நிலையத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவிப்பு:

# அடிப்படையில் மாவட்ட சபை அதன்பின் ஒருங்கிணைப்பு சபை

## போராளிகள் ஆயுதங்களை கீழே போட்டால் பேசத் தயார்; மன்னிப்பும் கிடைக்குமாம்!

(புதுடில்லி)

இலங்கையில் வாழும் தமிழர் பிரச்சினைகளைத் திர்ப்பதற்கு மாவட்ட சபைகள் அமைப்பே அடிப்படையானதாக இருக்கும் என்றும், அவை பணிபுரியத் தொடங்கிய பின்னர் ஒருங்கிணைப்புச் சபைகளை நிறுவுவது பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் தமது மூன்று நாள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு புறப்படும்போது டில்லி விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்தார்.

தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தயாராக இருப்பதாக மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கத் தயாராகவிருப்பதாகவும் உறுதியளித்ததுடன், இதற்குக் காலக்கெடு கிடையாதெனவும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஆயுதப்படையினர் பற்றி கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்கு ''அங்கு வன்முறைகள் முடிவுக்கு வந்த பின்னர் அவை விலக்கிக் கொள்ளப்படும்'' என்று பதிலளித்தார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் இலங்கையும், இந்தியாவும் ஆர்வம் கொண்டுள்ளதாகவும், அதே வேளையில் சகலவிதமான வன்செயல்களும் ஒழிக்கப்பட வேண்டுமெனவும் இரு நாடுகளும்

— 4-ஆம் பக்கம் பார்க்க

## செட்டிக்குளம் பஸ் மறித்து பணம், நகைகள் கொள்ளை!

(வவுனியா)

செட்டிக்குளம் பகுதியில் பஸ் ஒன்று வழி மறிக்கப்பட்டு அதற்குள் துப்பாக்கிகள் சகிதம் ஏறியவர்கள் நடத்திய பயங்கரக் கொள்ளையினால் வவுனியாப் பகுதியில் பெரும் பதற்றம் உருவாகியது.

தமிழ்ப் பிரயாணிகளிடம் இருந்த பணம், சங்கிலி, காப்பு, ஆகியவை பலாத்காரமாகப் பறிக்கப்பட்டதாகவும், கிராம சேவகர் ஒருவரிடமிருந்த முப்பத்தைந்து ரூபா பணம்கூட பறித்தெடுக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து செட்டிக்குளம் பகுதிக்கான சகல பஸ் சேவைகளும் ரத்துச்செய்யப்பட்டன. பஸ்ஸுக்குள் ஏறிய கொள்ளையர் உயிர் பயமுறுத்தல் விடுத்ததாகவும் தெரியவந்துள்ளது.

வவுனியா அரச அதிபர் கேட்கிறார்:

## சிங்களக் குடும்பத்தினரை நிபந்தனையின்றி விடுங்கள்!

(வவுனியா)

வவுனியாவிலுள்ள குருமன்காடு என்ற தமிழ்க் கிராமத்தில் சுமார் நாற்பதாண்டுகளுக்கு மேலாக வசித்துவந்த ஒரு சிங்களக் குடும்பம் நேற்று முன்தினமிரவு இனம்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தந்தை, தாய், நான்கு பிள்ளைகளாக மொத்தம் ஆறு பேர் கடத்தப்பட்டதாக மற்றொரு பிள்ளை அரசாங்க அதிபரிடம் தெரிவித்ததுடன், தமது பெற்றோரையும், சகோதரரையும் மீட்டுத் தருமாறும் கேட்டுக்கொண்டார்

இதனையடுத்து அரசாங்க அதிபர் திரு. கே. வி.

—4-ஆம் பக்கம் பார்க்க

சந்திப்பு முடிவில் இரு தலைவர்களும் விடுத்த அறிக்கை

## வடக்கு, கிழக்கில் சகஜ நிலைமையை ஏற்படுத்த சகலவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் இணங்கியுள்ளனர்.

இலங்கையின் ஒருமைப்பாடு, கௌரவம் ஆகியவற்றின் அமைப்புக்கு உட்பட சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கான முயற்சிகள் முன்னேறுவதற்கு தகுந்த தீர்வினை ஏற்படுத்தப்பட வேண்டும் என

— 4-ஆம் பக்கம் பார்க்க

## கல்லூரி அதிபர் மன்னாரின் புதிய அரச அதிபர்

மன்னார் மாவட்ட புதிய அரசாங்க அதிபராக மன்னார் அல்லஹ்ற ஆல் மகாவித்தியாலய அதிபர் ஜனாப் காதர்

—4-ஆம் பக்கம் பார்க்க

இணைப்புக் குழுச் செயலாளர் சம்பந்தன் அறிவிப்பு:

## இனக் கலவரங்களால் 750 தமிழ் அரசாங்க ஊழியர் உயிரிழந்துள்ளனர்

1956ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இடம்பெற்ற பல இனக் கலவரங்களினால் இதுகால வரையும் 750க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் உயிர் இழந்தும், நூற்றுக்கணக்கானோர் படுமோசமாகக் காயமடைந்தும் உடைமைகள், சொத்துக்கள் அனைத்தையும் இழந்த நிலையில் தமிழ்ப் பகுதிகளுக்கு அகதிகளாக வந்து அலலற்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை நம்பி வேலைக்குச் சென்ற பல அரச ஊழியர்கள் இனக் கலவரங்கள் ஏற்படும் போது மீண்டும் மீண்டும் தாக்கப்பட்ட நிலையில் அனைத்தையும்

—4-ஆம் பக்கம் பார்க்க

விமானத்திலிருந்து வந்த கூட்டறிக்கை:

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் எதுவுமில்லை!

(புதுடில்லி)

''பாரதத்துக்கும், இலங்கைக்கும் இடையே தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏதுமில்லை'' என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதியும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

தம் பிராந்தியத்திலான ஒருமைப்பாடு ஒருமித்த கருத்துக் கொண்டதாக இருக்கின்றது என அவர்கள் கூறியுள்ளனர். டாக்கா செல்கையில் விமானத்தில் வைத்து இக்கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. டாக்காவில் நிருபர்களிடம் பேசிய திரு காந்தி, ''இலங்கை ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக இருந்தது'' என்று கூறினார். தமக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் மேலும் தொடரக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரஸ்தாப இரு தலைவர்களினதும் பங்களாதேஷ் வருகை துயருற்ற பங்களாதேஷ் மக்களுக்கு பெரும் ஆறுதல் தருவதாகும் என்று ஜனாதிபதி எர்ஷாத் கூறியுள்ளார் பாரதத்

... 4-ஆம் பக்கம் பார்க்க

## தொடரும் கல் வீச்சு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பல பஸ்களுக்கு நேற்றும் கற்கள் வீசப்பட்டன. குருநாகலுக்கும் தம்புள்ளவுக்குமிடையில் ஒரு பஸ் சாரதி தாக்கப்பட்டாராம். பஸ் கண்ணாடிகள் உடைத்து நொருக்கப்பட்டன.

## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

அன் நீஸ் அன்ட் கம்பனியில் இடம்பெற்ற வாகனக் கடத்தல்களைக் கண்டிக்கும் முகமாக நேற்று முதல் அதன் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட இருந்த உண்ணாவிரதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட வாகனங்களை குறிப்பிட்ட சில நாட்களுக்குள் திருப்பி ஒப்படைப்பதாகச் சம்பந்தப்பட்ட சிலர் தெரிவித்ததையடுத்தே இவ் உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாம்.

## திருமலையில் 13 சடலங்கள்

(திருமலை)

திருமலை ஆஸ்பத்திரியில் பதின்மூன்று சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் 7 அடையாளம் காணப்பட்டன. இதனைத் தவிர ஒன்பது பேர் படுகாயத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மரணமானவர்களில சிலர் வடக்குறிச்சியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

பாடசாலை விழாவில் ஆசிரியை பேச்சு:

# குண்டுகள், துப்பாக்கிகளுக்கு நடுவினிலே மாணவருக்கு பாடம் கற்பிக்கப்படுகிறது

(கல்வியங்காடு)

''பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி பெற்றோர்களுக்கும் பெரும் பங்குண்டு. பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் பெற்றோர்கள் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். எமது பாடசாலையின் அபிவிருத்தியில் இப்பகுதி பெற்றோர் காட்டிவரும் ஆர்வம் பாராட்டுக்குரியதாகும். இடப்பற்றாக் குறையை உணர்ந்து ஒரு வகுப்பறையைக் கட்டித் தருவதற்கு தாமாகவே அவர்கள் முன்வந்தமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு திருநெல்வேலி ஶ்ரீமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி சபை கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் திருமதி எஸ். பரமானந்தன் குறிப்பிட்டார். கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பெரும்பாலான பெற்றோர் குறிப்பாக பெண்கள் சமுகமளித்திருந்தனர்.

சிரேஷ்ட உதவி ஆசிரியை திருமதி சி ஐயாத்துரை பேசுகையில், பெரும்பாலும் குண்டுகளுக்கும் துப்பாக்கி சத்தங்களுக்கும் மத்தியில் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டி இருப்பதாகவும், பெரும் சத்தங்களைக் கேட்டதும் பெரும்பாலான பெற்றோர் ஓடிவந்து தமது பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு சென்றுவிடுவதாகவும் கூறினார்.

பாடசாலை அபிவிருத்தி சபையின் தலைவராக திருமதி எஸ். பரமானந்தனும், உபதலைவராக திருமதி நா. ஆறுமுகமும், இணைச் செயலாளர்களாக திரு. செ. குஞ்சிதபாதம், திருமதி சுலோசனா சண்முகநாதன் ஆகியோரும், பொருளாளராக திருமதி இ. குமாரசாமியும், துணைப் பொருளாளராக திருமதி எம். சண்முகசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர். ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

அமைச்சர் அமரசிறி நம்பிக்கை:

# இனப்பிரச்சினைச் சமாதான தீர்வு பாரதத்தில் ஏற்படும்

புதுடில்லியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே நடைபெறுகின்ற பேச்சுவார்த்தை இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினையைச் சமாதான முறையில் தீர்த்துவைப்பதற்கு ஏற்ற திட்டமொன்றை தயாரிப்பதற்கு உதவியாக இருக்கும் என்று வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் எம். எஸ். அமரசிறி ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பெந்தோட்டையில் நடைபெற்ற சமயநிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் மேலும் தமது உரையில்; இலங்கையின் பிரச்சினையை இந்தத் தலைவர்கள் தெளிவான முறையில் புரிந்துள்ளமையால் சமாதானத் தீர்வொன்றைக் காண்பதில் எந்தவித கஷ்டமும் இருக்க முடியாது. பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது அவசியம். இதற்கு மகா சங்கத்தினர் ஒத்துழைப்பு நல்க வேண்டும். பௌத்த தர்மத்தின்படி தீவிரவாதிகள் தமது குறிக்கோளை அடைய முடியாது என்றும் குறிப்பிட்டார்.

''சிங்கள தமிழ் சமூகங்களிடையே நட்புறவினை வலுப்படுத்தக் கூடிய அரசாங்கத் திட்டங்களுக்கு மதத் தலைவர்கள் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனப் பிராந்திய அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர் செ. இராசதுரை வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் காமினி ஜயசூரியா; மாக்சிசவாதிகளின் நோக்கங்களுக்கமைய அரசாங்கம் நாட்டை ஒருபோதும் நிர்வகிக்கப்போவதில்லை'' என்றார்.

தொண்டமானாறு

# வெளிக்கள நிலையம் நடத்தும் பரீட்சைகளின் விபரங்கள்

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஆண்டு 13ஆம் வகுப்பிற்கான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப்பாடங்களிற்கான பரீட்சை யூலை இரண்டாம் திகதி நாடு பூராவும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கான சகல சுற்று நிருபங்களையும் தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நாட்டில் உள்ள சகல தமிழ் மொழிப் பாடசாலைகட்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும் நிலையச் செயலாளர் நா. சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஆண்டு ஏழு முதல் பதினொன்று வரையிலான வகுப்புகட்கான கணித விஞ்ஞான பரீட்சைகள் யூலை இறுதி வாரத்தில் நடைபெறும் என்றும் இது தொடர்பான விரிவான சுற்று நிருபங்களும் நாட்டில் உள்ள சகல தமிழ் மொழிப் பாடசாலைகட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிக்கள நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆண்டு 12ஆம் வகுப்பிற்கான பரீட்சைகள் இரண்டாம் தவணை முடிவில் நடைபெறமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உங்களுடையதா?

ரெறன்ஸ் என்பவருக்குரிய வைத்தியக் குறிப்புகள் அடங்கிய அப்பியாசப் புத்தகம் ஒன்றும், போத்தல் ஒன்றும் பிரதான வீதி மினி பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## வரி விளம்பரம்

விற்பனைக்கு

சாவகச்சேரி கற்குழி நல்லதண்ணீர்க்கிணற்றடியில் வீடுகட்ட உகந்த 1¾ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு;
அம்பாள் பார்மஸி
சாவகச்சேரி.

## கிறிஸ்தவ ஆசிரிய சங்க நிர்வாகிகள்

(நல்லூர்)

இலங்கை கிறிஸ்தவ ஆசிரிய சங்க ஒன்றியத்தின் வடமாகாணக் கிளையின் மூன்றாவது வருடாந்த மகாநாடு யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெற்றது.

புதிய ஆண்டின் நிர்வாகிகள் தெரிவில் தலைவராக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எல். பி. ஜெயசிங்கமும், உபதலைவர்களாக சுண்டுக்குளி பரியோவான் கல்லூரி அதிபர் சி. ஈ. ஆனந்தராஜனும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. இராசன் கதிர்காமரும், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையாவும், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என்.எஸ்.சாமுவேலும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பரராஜசிங்கம் ஆகியோரும், செயலாளராகவும், பொருளாளராகவும் திரு. எஸ். டி. பொன்னையாவும், உப செயலாளராக திரு. எஸ். பி. ஜீவானந்தமும், நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. பி. ஈ. தனராஜசிங்கம், திருமதி, வி. ஏ. செல்லையா, திருமதி பரமபதி, திருமதி ஆரியரத்தினம், திரு. ஏ. போல் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## அவருக்கு வந்ததே கோபம்

(இருபாலை)

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவரின் மின் வயர்களை மின் அத்தியட்சகரின் வேண்டுகோளின் பேரில் துண்டிக்கச் சென்ற கோப்பாய் உப-அலுவலக ஊழியர்களை சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர், தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும், உப-அலுவலகத்திற்கும் வந்து அங்கிருந்தவர்களையும் ஏசியதாகவும் தெரியவருகிறது.

இவரின் இந்நடவடிக்கை பற்றி யாழ்- அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க






✳ கோண்டாவில் வடக்கு அருளம்பலம் அருள்தேவி தம்பதிகளின் மகள் உஷா நந்தினி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஆவரங்கால், புத்தூர் தியாகராஜசர்மா — கோகிலராணி தம்பதிகளின் மகள் ஜனறஞ்ஜனி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ வட்டக்கச்சி குணசீலன் பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் நீற்று இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஓட்டுமடம் துர்க்கா இல்லம், சிவநேசன் தம்பதிகளின் மகள் சுகன்யா (ரம்யா) இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## இளைஞனின் குட்டு அம்பலம்

(அச்சுவேலி)

குறிப்பிட்ட சில தினங்களுக்கிடையில் இரண்டு பெண்களைத் திருமணஞ் செய்த தமிழ் இளைஞர் ஒருவர் வலையாக மாட்டிக் கொண்டார். தீவிரவாத இளைஞர்களின் விசாரணைக்குள்ளாகியதுடன் சட்ட நடவடிக்கைக்கும் இவர் உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளதாம்.

ஜேர்மனிக்குச் சென்று பணம் சம்பாதித்துக்கொண்டு நாடு திரும்பிய பிரஸ்தாப இளைஞருக்கு இரண்டு பெண்களிடம் சீதனம் வாங்கித் திருமணம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டதாம். கோப்பாய்த் தொகுதியிலும் யாழ்ப்பாணம் தொகுதியிலும் இரண்டு யுவதிகளை மணக்க ஏற்பாடு செய்து திருமணமும் நடைபெற்றதாம்.

இந்த இளைஞரின் இம்மாறுபட்ட முயற்சி இரு பெண் வீட்டாருக்கும் தெரிய வந்ததையடுத்து இளைஞர் தீவிரவாத இளைஞர்களின் விசாரணைக்குள்ளாக வேண்டி ஏற்பட்டது. இரு பெண் வீட்டாராலும் நிராகரிக்கப்பட்ட இவர் சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளாராம்.

## வசமாக அகப்பட்டனர்

(சுழிபுரம்)

தந்திக் கம்பங்களிலிருந்து கம்பிகளை வெட்டிச் சென்ற சிலர் மீண்டும் அக்கம்பிகளை கம்பங்களில் பொருத்திய சம்பவம் ஒன்று சுழிபுரத்தில் நடந்தது. மாலை நேரம் தந்திக் கம்பிகளை வெட்டிய இவர்களை இப்பகுதிப் பொது மக்கள் அடையாளம் கண்டு இளைஞர் குழு ஒன்றிடம் முறையிட்டனர். இதனைத் தொடர்ந்து இளைஞர் குழு கம்பித் திருடர்களைப் பிடித்து அவர்களைக் கொண்டே தந்திக் கம்பிகளை மீண்டும் பொருத்துவித்தது டன் எச்சரிக்கையும் செய்து அனுப்பினர்.

## மக்கள் அச்சம்

(இருபாலை)

நாவற்குழிப் பகுதியில் இருந்து இரவு நேரங்களில் அடிக்கடி எழும் பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள், சூட்டுச் சத்தங்கள், ஆகியவற்றினால் இருபாலைப் பகுதி மக்கள் பெரும பீதியடைந்துள்ளதுடன் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளில் படுப்பதை விட்டு வெளியான இடங்களிலும், பாதுகாப்பான இடங்களிலும் படுக்கைக்குச் செல்வதைக் காணக் கூடியதாய் உள்ளது.

## 2 1/2 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(கல்வியங்காடு)

நல்லூர் உப—அலுவலகத்தினால் திருநெல்வேலி சந்தையில் ஐந்து கட்டடங்கள் கட்டுவதற்காக இரண்டரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வியாபாரிகளின் வசதிக்காக கட்டப்படவிருக்கும் இக்கட்டடங்களில் ஒன்றுகட்டிமுடிக்கப்பட்ட நிலையிலும் மற்றவை ஆரம்ப நிலையிலும் உள்ளன.

I. C. M. A.
Section A & B
ஆரம்பமாகிவிட்டன
I·A·B· Found Inter Final
I·A·A·
English Spoken & Grammar
ஆரம்பம் : 8-6-85
நிர்வாகி
கே. ஜீஸ் இன்ஸ்ரிரியூட்
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி :: யாழ்ப்பாணம்

சவூதி அரேபியா
போன்ற
மத்திய கிழக்கு நாட்டு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோருக்கான பிரயாண ஒழுங்குகளுக்கும், பாஸ்போர்ட், பொண்ட் (BOND) வசதிகள் முதலியவற்றுக்கும்
உடன் தொடர்பு கொள்க:
S. K. மகேந்திரன் (சட்டத்தரணி)
24, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24031

ஈழமுரசு



### உதய சிந்தனை

அறிவானது ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அதுமட்டுமன்றி, பகைவர் உள்ளே புகுந்து அழிக்க முடியாத காவலுமாம்.

— திருக்குறள் உரை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

4-6-1985 செவ்வாய்க்கிழமை (குரோதன வைகாசி 22)

# உண்மையைச் சொல்வது எமது தலையாய கடமை

''தந்தையொடு கல்வி போம்; தாயொடு அறுசுவை உண்டி போம்'' என்பது வழக்கிலிருந்து வரும் ஒரு மொழி.

''டீசலோடு யாழ்ப்பாண மாணவர் கல்வி போம்'' என்ற புதுமொழியையும் இதனோடு சேர்த்துக் கொள்ளலாமோ என்று பெற்றோர்கள் எண்ணும் ஒரு நிலை இப்போது இங்கு உருவாகி வருகின்றது.

டீசல் தட்டுப்பாட்டினால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பஸ் சேவைகளையும் வடபிரதேச போக்குவரத்துச் சபையினர் ரத்துச் செய்துள்ளதால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை பஸ் நிலையத்தில் தவம் கிடப்பவர்களால் மட்டும்தான் உணர முடியும்.

வசதி குறைந்தவர்களின், நடுத்தர அல்லது மத்திய தர வர்க்கத்தினரின், ஏழை எளிய மக்களின் ஒரேயொரு போக்குவரத்துச் சாதனமே பஸ்.

ரயிலையும் மறந்துபோன மக்களுக்கு, வடபிரதேச போக்குவரத்துச் சபை பஸ்கள் தனித்து நின்று இயங்கி, மிகப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்து வந்தன.

சேவையிலீடுபட்டிருந்தபோது சிறுடையினரின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு எத்தனை சாரதிகளும், நடத்துனர்களும் ஆளாகியுள்ளார்கள்.

துப்பாக்கிச் சூடுபட்டு எத்தனை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மரணமாகியிருக்கிறார்கள்?

பூஸா இளைஞர்களையும், பலாலி இளைஞர்களையும் வீடுகளில் கொண்டு சென்று இறக்குவதற்காக எத்தனை பஸ் சாரதிகளும், நடத்துனர்களும் தமது உயிரைப் பணயம் வைத்து முகாம்களுக்குச் சென்றுவந்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களைப் பாதுகாப்பாக ஏற்றிச் செல்வதற்காக, தமது பாதுகாப்பைத் துச்சமென மதித்துச் செயல் புரிந்த போக்குவரத்துச் சபை ஊழியர்களை மறக்க முடியுமா?

ஜீ. சி. ஈ. பரீட்சைக்கான ஆவணங்களை ஏற்றி வரவும், பாடசாலை மாணவர் பாடப் புத்தகங்களை ஏற்றி வரவும் நெருக்கடியான நிலையிலும் எத்தனை பஸ்கள் கொழும்பிற்குச் சென்று வந்துள்ளன?

இவ்வாறான அரிய பணிகளைச் செய்து, யாழ்ப்பாண மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காகச் சேவை புரிந்த வடபிரதேச போக்குவரத்துச் சபையின் பஸ்கள் இப்போது ஓய்வு எடுக்க அனுப்பப்பட்டுள்ளன.

இந்த பஸ்களுக்குத் தேவையான டீசல் அவ்வப்போது கொள்ளையடிக்கப்பட்டபோதிலும், நிலைமை உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது பஸ்கள் ஓட விடப்பட்டன.

ஒரு துளி டீசல்கூட இல்லாத நிலையில், டீசலை எடுத்துவர எவரும் பாதுகாப்பு வழங்கக்கூட முன்வராத நிலையில், போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தாமாக முன்வந்து வவுனியாவிலிருந்து பஸ் ஒன்றில் டீசலை எடுத்துவரும்போது நடந்தது என்ன?

தமக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று சொல்லி, சேவை ஒன்றையே தலையாய கடமையாகக் கருதி, அந்த ஊழியர்கள் எடுத்துவந்த இருபத்தைந்து 'பரல்' டீசலும் அபகரிக்கப்பட்டதால் யார் பாதிக்கப்பட்டுள்ளனர்?

பஸ் சேவைகள் ரத்தானதால் அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்கள் தமது கடமைக்குச் செல்லமுடியாதுள்ளனர்.

காணிக் கந்தோர், பிறப்புச் சாட்சிப் பத்திரம், பாஸ்போட் போன்ற அத்தியாவசிய வேலைகளுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் கருமங்கள் தாமதமாகின்றன.

இவைகளில் பொதுமக்களே பெரும் பாதிப்படைகின்றனர்.

எல்லாவற்றிலும் பார்க்க மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மாணவர்களே.

தினசரி இங்கு இடம்பெறும் எத்தனையோ அசம்பாவிதங்களுக்கிடையிலும் தமது கல்வியை வெகு சிரமத்துடன் தொடர்ந்து வந்த மாணவர்கள், பஸ் சேவை ரத்தானதால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமக்குக் கிடைத்த புள்ளி விபரமொன்றின்படி, சுமார் ஏழாயிரம் மாணவர்கள் போக்குவரத்து வசதியின்மையால் பாடசாலைக்குச் செல்ல முடியாது தவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

பல நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

கண்மூடித்தனமாக நடத்தப்படும் டீசல் கொள்ளைகூட மாணவ சமுதாயத்தையே பாதிக்கின்றதென்பதை சம்பந்தப்பட்டவர்கள் கண் திறந்து பார்க்க வேண்டும்.

எவரது, எந்த நடவடிக்கையும் மாணவர்களை எவ்வகையிலும் பாதிக்கக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுவது எமது தலையாய கடமையென நாம் கருதுகின்றோம்.

---

## ★ பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அறிவிப்பு

# அவசியமானால் வெளிநாட்டு துருப்புகள் அழைக்கப்படும்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நடைபெற்று வரும் கம்யூனிஸ்ட்டுகளின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு அவசியமாயின்தான் வெளிநாட்டுத் துருப்புகளை அழைக்கவும் தயங்கப் போவதில்லை என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. மார்கோஸ் அறிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பு எதிர்க்கட்சியினரின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. பிரதான எதிர்க்கட்சிகளின் பதினொரு கட்சிக் கூட்டணியின் தலைவர் திரு. கோகால் தமது கண்டனத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திறனற்றது தற்போதைய அரசு, அத்துடன் பலவீன நிலையிலும் அரசின் நிலையுள்ளது என்பதையே ஜனாதிபதியின் இப்பேச்சு எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளரின் நடவடிக்கையால் நாச வேலைகள் தீவிரமடைகின்றன என ஜனாதிபதி கூறியுள்ளார். வெளிநாட்டுத் துருப்புகள் என ஜனாதிபதி கூறியிருப்பது யாரெனக் கூறாது மறைமுகமாயிருப்பினும் அவர் அமெரிக்கத் துருப்புகளையே கருதிக் கொண்டுள்ளார் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## இஸ்ரேல் அறிவிப்பு லெபனானிலிருந்து

# வாரமுடிவுக்குள் துருப்புகள் முழுமையாக வாபஸாகும்

(டெல்அவிவ்)

தென் லெபனானில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் இவ்வாரத்தில் முழுமையாக வாபஸ் பெறப்பட்டுவிடும்'' என்று இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு பெரஸ் நேற்றுத் தெரிவித்தார்.

''எனினும் லெபனான் இராணுவ மக்கள் படைக்கான உதவி நீடிக்கும்'' என்றார் அவர்.

பிரான்ஸ் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## கூட்டத்தொடர்

(சென்னை)

தமிழ்நாடு சட்ட சபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக நேற்று ஆரம்பமானது.

# வெளிநாட்டில் சீன பிரதமர் 17 நாட்கள் தங்கியிருப்பார்

(பீக்கிங்)

சீனப் பிரதமரின் வெளிநாட்டு விஜயம் பதினேழு நாட்கள் நீடிக்கும் என பீகிங் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

திரு. ஷியோ ஷியாங் நெதர்லாந்துக்கும் செல்லவுள்ளார்.

தனது பிரிட்டன் விஜயத்தின்போது அவர் ஹொங்கொங்கைக் கையேற்பது தொடர்பான செயற்பாட்டிலும் ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பாகிஸ்தான் பிரதிநிதிக்குழு பங்களாதேஷ் செல்கிறது

(கராச்சி)

பங்களாதேஷில் உண்டான புயல், பேரலைகள் எழுச்சியினால் விளைந்த விபரீதங்களைப் பார்வையிடும் பொருட்டு பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் யாக் கூப்கான் தலைமையிலான உயர் நிலைப் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் புதன்கிழமை பங்களாதேஷுக்குப் பயணமாகவுள்ளது.

இக்குழுவினர் ஜனாதிபதி எர்ஷாத்தையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அவர்களுக்கு தெரியாத விடயம்

(டாக்கா)

பங்களாதேஷில் புயலாலும், பேரலைகளாலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தீவு ஒன்றிற்கு பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத், பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகியோர் சென்று மரணாபாயத்திலிருந்து உயிர் தப்பிய சில பெண்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து உடைகள், உணவுப் பொருட்கள் கொடுத்து ஆறுதல் தெரிவித்தனர். இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் அவர்கள் யாரென்பது அப்பெண்களுக்குத் தெரிந்திருக்கவில்லையாம்.

# இந்திய-பாக். இணை முயற்சி விஜயலக்ஷ்மி பண்டிட் மகஜர்

(புதுடில்லி)

அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பாக பாரதமும், பாகிஸ்தானும் இணைந்து செயற்படவேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரில் பிரதமரின் பாட்டனார் நேருஜியின் தங்கையும் முதிர்ச்சிமிக்க அரசியல்வாதியுமான விஜயலக்ஷ்மி பண்டிட், திரு. கிருஷ்ண ஐயர் முதலானோர் இம்மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

# அங்கோலாவில் நானூறு கிளர்ச்சியாளர்கள் கொலை!

(லண்டன்)

அங்கோலாவின் இருமாகாணங்களில் நானூறு கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நூறு பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சங்கு குளிப்போர் நலனுக்காக...

(சென்னை)

''சங்குக் கடத்தலைத் தடுப்பதற்கும் சங்குக் குளிப்போர் நலன் பேணுவதற்கும் அரசு ஐம்பது இலட்சம் ரூபா செலவில் பல திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளது'' என்று பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கோவேந்தன் தெரிவித்துள்ளார்.

## 'சமுதாய உயர்வுக்கு வழி'

(சென்னை)

''ஜாதி பேதமற்ற சமுதாயத்தில் தான் நன்மைகள் உண்டாக முடியும். மதுப் பழக்கத்தைக் கைவிட்டால் சமுதாய நிலை மேன்மேலும் அதிகரிக்கும்.'' என்று மத்திய மகளிர் சமூக நல்வாழ்வுத் துறை இணையமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அறிவுறுத்தினார்.

## விடுதலை

(புதுடில்லி)

பாகிஸ்தான் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஜம்மு-காஷ்மீர் பகுதியைச் சேர்ந்த பாரதப் பொறியியலாளர்கள் மூவரும் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளையடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## அமுல்

(புதுடில்லி)

மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேலை என்ற திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

## உஷ்ணத்தால் உயிரிழப்பு

(பீகார்)

பீகாரில் கடும் உஷ்ணத்தால் நாற்பத்தெட்டுப் பேர் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## பெய்றூட் திரும்பினார்

(பெய்றூட்)

லெபனான் ஜனாதிபதி அமின் ஜமாயல் தனது சிரியப் பயணத்தைப் பூர்த்தி செய்து கொண்டு பெய்றூட் திரும்பினார்.

பாலஸ்தீன முகாம்களில் காயமுற்று அகதிகளாக உள்ள நூற்றுக்கணக்கானோரை விடுவிக்கும் முயற்சியின் ஓர் அம்சமாக தற்காலிகப்போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ளவே இவர் அங்கு சென்றிருந்தார்.

4.6.1985 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

## ஜனாதிபதிக்கு அவசர தந்தி:

## எரிபொருளின்மையால் வடக்கில் பட்டினிச்சாவு ஏற்படப்போகிறது!

வடபகுதிக்கு உடனடியாக எரிபொருள் அனுப்பப்படாவிட்டால் இப்பகுதி மக்கள் பட்டினியால் சாகும் நிலை ஏற்படும்; இப்பேராபத்தினின்றும் மக்களைக் காப்பாற்றுங்கள் எனத் தெரிவிக்கப்பட்ட அவசர தந்தியொன்றை பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார். இத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "அனுராதபுரத்திற்கு இப்பால் எரிபொருட்கள் கிடையாதிருக்கின்றன; வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தனியார் போக்குவரத்துச் சேவையும் பாதிக்கப்பட்டு மட்டுப்பாடு அடைந்துள்ளது. போக்குவரத்து எல்லாமே ஸ்தம்பித நிலையை அணுகிவிட்டது. விலைவாசிகள் வானளாவ ஏறிக்கொண்டேயிருக்கின்றன. கமம், கைத்தொழில் என்பனவும், வாழ்க்கை முழுமையுமே பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன."

### வ. பி. போ. சபைத் தலைவரின் உருக்கமான வேண்டுகோள்:

# எல்லா முயற்சிகளுமே தோல்வி; எரிபொருள் கிடைக்கும்வரை சகல பஸ் சேவைகளும் ரத்து!

## கொள்ளையடிக்கப்பட்ட 25 பீப்பா டீசலையும் மீளத்தருமாறு கரம் கூப்பி வேண்டுகிறேன்

30.05.85ந் திகதி வட பிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ். சாலைக்குச் சொந்தமான வாகனமொன்றில் 25 பீப்பா டீசல் அனுராதபுரத்தில் இருந்து கொண்டு வரும்போது ஓமந்தையில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது. அத்தோடு இவ்வாகனத்தைச் செலுத்திய சாரதியும் இன்னொரு சக தொழிலாளியும் தாக்கப்பட்டனர். சம்பந்தப்பட்ட வாகனமும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. கடந்த சில மாதங்களாக எமது பகுதி மக்கள் அமைதியற்ற சூழ்நிலையில் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். நாட்டில் நிலவுகின்ற பதற்ற நிலையினால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு பல இடர்களுக்கு மத்தியில் நாம் எரிபொருள் பெற்று வந்தோம். எல்லாவிதமான எமது முயற்சிகளும் விரக்திக்குள்ளானதால் இறுதியாக பீப்பாக்களில் டீசல் கொண்டு வரும் முறையை மேற்கொண்டோம். இம் முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் எரிபொருளை ஏற்றி வருவது ஆகாத காரியமாகும். இம் முயற்சிக்கும் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் பாதுகாப்புப் படையினர் உள்ளனர். எனவே எமது பஸ் சேவைகளை எரிபொருள் கிடைக்கும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வட பிரதேச போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினத்தினால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது; இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்நிலையில் பொது மக்களின் சேவை செய்யும் நிறுவனம் என்ற முறையில் எமது பொறுப்புக்களில் இருந்து விலகி விட முடியாது. கடந்த காலங்களிலும் எமது சபை சாலைகளிலும், வேலைத் தளங்களிலும் பல இலட்ச ரூபா பெறுமதியான வாகனங்கள், இயந்திரங்கள், மாற்று உறுப்புக்கள், டீசல், ரயர்கள் கொள்ளை போயின. இலட்சக் கணக்கான பணம் கொள்ளையிடப்பட்டது. பல பஸ்கள் தீயிடப்பட்டுள்ளன. இருப்பினும் இவற்றைப் பொருட்படுத்தாமல் நாம் மக்களுக்கு சேவையாற்றி வந்தோம். இன்று இச் சேவையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று வட பகுதி மக்கள் போக்குவரத்து வசதியின்றி அல்லலுறுகின்றனர். மக்கள் தங்களுக்கு ஏற்படக் கூடிய உயிராபத்தையும் பொருட்படுத்தாது பல மடங்கு அதிகரிக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுத்து தனியார் வாகனங்களில் பிரயாணம் செய்கின்றனர். இன்று நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் தனியார் பஸ்களில் கட்டணங்கள் அதிகரித்து இருப்பதையும் நாம் ஆட்சேபிக்க முடியாது.

பள்ளிச் சிறுவர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் இருந்து வந்த ஒரே துணையான எமது சபை வாகனங்களுக்கும் இன்று சோதனைக் காலம் வந்துவிட்டது. அடுத்தடுத்து ஏற்படும் கொள்ளைகள் ஒரு புறமிருக்க ஊழியர்களுக்குச் சம்பளமே கொடுக்க முடியாத நிலை மறுபுறம். எவ்வளவோ பெரு முயற்சி செய்து அனுராதபுரத்தில் இருந்து கொண்டு வந்த டீசலை யாரோ நடு வழியில் அபகரித்துவிட்டார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் வட பகுதி வாழ் மக்களின் நன்மையைக் கருதி கொள்ளை போன 25 பீப்பா டீசலையும் மீளத் தருமாறு இரு கரம் கூப்பி வேண்டுகோள் விடுக்கின்றேன். தயவு செய்து பொது மக்கள் போக்குவரத்து வசதிக்காக நாம் கொண்டு வரும் டீசலில் யாரும் கைவைக்க அனுமதிக்க வேண்டாமெனவும் அதற்குரிய பாதுகாப்பை வழங்குமாறும் பொது மக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேற்குறித்த காரணங்களால் எமது பஸ் சேவைகளை எரிபொருள் கிடைக்கும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இக்கட்டான காலகட்டத்தில் பொது மக்கள் போக்குவரத்து வசதியின்றி அல்லற்படுவர் என்பதை எண்ணி நாம் மனம் வருந்துகின்ற போதிலும் எமது கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்ட காரணிகளால் சேவையை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது நிறுவனத்தில் பணி புரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், அவர்களை நம்பி வாழ்கின்றவர்களும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். எனவே நிலைமை சீரடைந்து பஸ்சேவையைத் தொடரக் கூடிய சூழ்நிலை விரைவிலே உதயமாக வேண்டுமென்பதே எமது விருப்பமாகும். அதுவரை ஏற்படும் சிரமங்களை தயவு செய்து நீவிர் பொறுத்தருள வேண்டுமென பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

## லொறித் தாக்குதல்:

### ஆஸ்பத்திரியில் மூவர் அனுமதி

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற லொறி ஒன்று வழிமறித்துத் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

ஊறணியைச் சேர்ந்த எஸ். இராஜரட்ணம் (30), அச்சுவேலி குணசேகரம் (28), அச்சுவேலி செல்வானந்தராஜா (29) ஆகியோரே நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

### சிங்களக் ..

லோகேஸ்வரன் விடுத்துள்ள விநயமான வேண்டுகோளில், கடத்திச் செல்லப்பட்ட ஜி. ரி. சோமரத்னவுக்கும் குடும்பத்தினருக்கும் எந்தத் தீங்கும் விளைவிக்காது அவர்களை மனிதாபிமான அடிப்படையில், நிபந்தனை எதுவுமின்றி விடுவிக்குமாறு பணிவுடன் கேட்டுள்ளார்.

## கோமாரித் தாக்குதலுக்கு 'ஈரோஸ்' உரிமை கோரல்

கோமாரியில் ஏப்ரல் மாதம் 26ம் திகதி மூன்று இராணுவ வாகனங்களின் மீது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதல்பற்றி ஈரோஸ் இயக்கம் தங்கள் வெளியீடான 'பொதுமை' பத்திரிகையில் விபரித்துள்ளது.

இந்த நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் அதிரடிப் படையினர் பயணம் செய்த இரு வாகனங்கள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தம்மால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு முப்பது படை வீரர்கள் மரணமானதாகவும், ஈரோஸ் கெரில்லாக்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு, கிழக்கில் ...

-1-ஆம் பக்கத் தொடர்

இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

சகலவிதமான வன்முறைகளும் தணிந்து இறுதியில் முற்றாக நீங்க வேண்டும் என்பது குறித்தும் இரு தரப்பினரும் மேலும் இணங்கியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விரைவில் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கு சகல முயற்சிகளும் ஏற்படுத்தப்படும். இந்தியாவில் உள்ள இலங்கைப் பிரஜைகள் கூடிய விரைவில் தாயகம் திரும்புவதற்கு இந்த நடவடிக்கை ஏதுவாக இருக்கும். இலங்கை இந்திய தலைவர்களின் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இருந்தன எனவும் மனம் திறந்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன எனவும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கஷ்டங்களை சமாளிப்பதற்கு ஒத்துழைப்பு மேற்கொள்வதில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு ஏற்றவாறு இந்தப் பேச்சுவார்த்தைகள் அமைந்தன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள பாரம்பரிய நட்புறவு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் மீண்டும் உறுதி கூறப்பட்டது.

### அடிப்படையில்...

...1ஆம் பக்கத் தொடர்

விரும்புவதாகவும் ஜனாதிபதி சொன்னார்.

கூடுதல் அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்கும் மாவட்ட சபைகளை அமைப்பதைத் தாம் ஏற்கனவே தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அடிப்படையில் மாவட்ட சபையே அமையுமென்றும், பின்னர் பிராந்திய ரீதியில் ஒருங்கிணைப்பு சபைகள் உருவாக்க பரிசீலனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

### ஓவர்ஸியர் விடுதலை

கடத்திச் செல்லப்பட்ட யாழ். அரச வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் திரு. கே. செல்வராஜா நேற்று முன்தினம் இரவு கஸ்தூரியார் வீதியிலுள்ள அவரது வீட்டிற்கு அருகில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

### இலங்கைக்கும்....

...1ஆம் பக்கத் தொடர்

துக்கும், பங்களாதேஷுக்கும் இடையிலான சரித்திரப் பிணைப்பு பிரிக்க முடியாதது என்றும் அவர் சொன்னார்.

டிசம்பரில் டாக்காவில் நடைபெறவுள்ள தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உச்சிமாநாட்டின் வலுத்தன்மைக்கு பாரத, இலங்கைத் தலைவர்களினது பங்களாதேஷ் விஜயம் முன்னோடியானது என பங்களாதேஷ் ராஜ்ய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### கல்லூரி அதிபர்...

நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய மன்னார் அரசாங்க அதிபர் ஜெகா செந்தில்நாதன் முல்லைத்தீவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### இனக்கலவரங்களால் ..

—1ஆம் பக்கத் தொடர்

இழந்து தமிழ்ப் பகுதிகளுக்கு ஓடிவந்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் பாதிக்கப்பட்ட ஊழியர் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுர சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட ஊழியரின் ஆலோசனைக் கூட்டம் பாதிக்கப்பட்ட ஊழியர் திரு. க. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

அனுராதபுர சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு நிலை பெயர்ந்து வந்த ஊழியர்களுக்கு அரசாங்கம் தகுந்த நிவாரணம் வழங்கும் வரையும் வேலைக்குத் திரும்புவது இல்லை எனவும், தீர்மானிக்கப்பட்டது.

''ஈழமுரசு'' சாயிபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 4-6-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.